MCOP.No. **101/2024**

Date : 01.07.2026

Witness Name & Rank – ஈஸ்வரி – PW1

**சாட்சி அழைக்கப்பட்ட 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது தந்தை பெயர் எதுவென்றால் அங்கமுத்து. எனது தந்தைக்கு கண் பார்வை இல்லை என்றால் சரிதான். எனது தந்தையுடன் எனது அம்மா ஊதுபத்தி வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். நான் கிணத்துகடவில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தந்தை மற்றும் தாயார் திருப்பூரில் வசித்து வந்தனர் என்றால் சரிதான். விபத்து சாலை கோவை – பொள்ளாச்சி சாலை என்றால் சரிதான். மேற்படி எனது தாய் மற்றும் தந்தை ஊதுபத்தி வியாபாரத்தை மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் செய்து வழக்கம் என்றால் சரிதான். எனது தந்தை மற்றும் தாய் சாலையை கடந்த போது விபத்து நடந்தது என்றால் சரிதான். மேற்படி விபத்தில் எனது பெற்றோரின் கவனக்குறைவால் நடந்தது என்றால் சரியல்ல.
2. எனது தாயாரின் வயது 54 என்று குறைவாக குறிப்பிட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எந்த ஒரு சூழ்நிலையிலும் எனது பெற்றோரின் வருமானத்தை நம்பி இல்லை என்றால் சரியல்ல. அதிக தொகை இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயாரின் விபத்து பதிவேடு தாக்கல் செய்யாத நிலையில் என்ன சிகிச்சை அளிக்கப்பட்ட குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. எனது மனு 3 வது எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---